# நான் என் சத்துருக்களை எவ்வாறு நடத்துகிறேன்?

*-J.C.Choate*

எல்லாருக்கும் சத்துருக்கள் உள்ளனர். இயேசு கிறிஸ்து பாவமற்றவாழ்வு நடத்திட்டபோதும் அவருக்கு அநேக சத்துருக்கள் இருந்ததினால் அவரை பகைத்தனர். மேலும் அவர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளும்படியாய், எல்லாரும் நீதிமான்களாய் இருந்திட அவர்களுக்கு போதித்தும் இறுதி முடிவாக அவர்களுக்காவே அவர் கடைசியில் சிலுவையில் அறையப்பட்டார். ரோமர்களின் சமய சார்பற்ற அரசு - அவரை சிலுவையில் அறைந்தது, ஆனால் அவர்களின் மதத்தலைவர்களும் அவரின் மரணத்திற்கு பொறுப்பானவர்களாவர்.

நமக்கும் அநேக சத்துருக்கள் உள்ளனர். நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, கர்த்தருடைய குடும்பத்தில் அங்கமாயிருந்து தேவபக்திக்குரிய வாழ்க்கை வாழ்வதினால் நம்மைச் சுற்றிலும் நம்மை எதிர்க்கக்கூடிய மக்கள் இருக்கின்றனர். அவர்கள் நம்மை குற்றப்படுத்தி நமக்கு எதிரிடையாயிருக்கின்றனர். இவ்வுலகமும் கூட நமக்கு எல்லா சோதனைகளையும் அளிப்பதினால் தேவனைவிட்டு தூரம் சென்றிட நம்மை வழி நடத்த முயற்சிக்கின்றது. அவிசுவாசம், மனித நலக்கோட்பாடு மற்றும் உலக ஆதாயமானவைகள் நம்மை அழிக்கக்கூடிய கருவிகளாகவும், தவறான விருப்பார்வம் உண்டாக்கும் சமய கோட்பாடும், கிறிஸ்துவுக்கு எதிரான பொய்யான சமயத்தலைவர்களைப் பின்பற்றுதல் ஆகிய இவைகள் நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுவதனால் கிறிஸ்துவுக்கும் நமக்கும் எதிராகப் பயன்படுத்தப்படுகின்றன. நம்மை அழிக்கிறது. எப்போதும் நம்முடைய முதன்மையான எதிராளியான சாத்தான், மற்றும் அவனை பின்பற்றுகிறவர்கள், நம்முடைய ஆத்துமாமீது பழிசுமத்தி நரகத்திலே இழுக்கபார்க்கிறான் (1பேது.5:8).

ஆகையால் நாம் எவ்வாறு நமது சரீர பகைவர்களை மேற்கொள்ளலாம்? நம்மை பகைக்கிறவர்களை நேசியுங்கள் அவர்களுக்கு நன்மை செய்யுங்கள் என கிறிஸ்து கூறியுள்ளார். "உனக்கடுத்தவனைச் சிநேகித்து உன் சத்துருவை பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதை கேள்விப்பட்டிருக்கிறீர்கள். உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்" மத்.5:43-45.

எப்படி நம் சத்துருக்களை, நம்மை நிந்திக்கிறவர்களை, துன்புறுத்துகிறவர்களை நேசிக்க முடியும்? மனித தன்மையுடைய நம்மால் முடியாததுதான், ஆனால் தேவதன்மையுடைய கிறிஸ்தவர்களாலும், தேவ தன்மையில் வளரக்கூடியவர்களாலும் 2பேது.1:4-ல் கூறியுள்ளபடி நடந்தால் கூடும். "இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது"

எனவே, நமது சத்துருக்களின் மீது தெய்வீக அன்பு செலுத்திட வேண்டுமென்பதே இதற்கான பதிலாகும். (கிரேக்க மொழியில் அன்பின் உயர்நிலையான (Agape) ‘அகாப்பே’ என்ற வார்த்தையானது அன்பினை செலுத்திடவேண்டும்) அந்த அன்பு எத்தன்மையானது? அது உணர்ச்சி வசப்பட்டதல்ல. ஒருவன் நமக்கு திரும்ப அளிப்பது தீமையை அளிப்பதாய் இருந்தாலும், நாம் நமது நன்மையை அளித்திடல் வேண்டும். மிகவும் உறுதியான அம்மனிதன் மிகச் சிறப்பானதும், அவன் விரும்பி எதிர்பார்த்ததுமான அன்பை அளித்திட வேண்டும். நாம் அவனை துன்புறுத்தக்கூடாது. அல்லது அவன் அழிந்திட எதனையும் செய்திடல் கூடாது. இம்மியும் வழுவின்றி அவன் இரட்சிக்கப்பட நாம் அவனுக்கு நம்பிக்கையுடன் அவன் மனம் மாறிட உதவிடல் வேண்டும்.

தேவன் நம்மில் தெய்வீக "Agape" அன்புடையவராய் இருக்கிறதினாலேயே தமது ஜீவனை நமக்களித்தார். நாம் பாவிகளாய் இருந்து தேவனைவிட்டு வெகுதூரம் சென்றவர்களாய் இருந்தபோதும் அவர் நம்மீது அன்புகூர்ந்தார். இப்பேர்பட்ட அன்பையும் இரக்கத்தையும் நாம்பெற்றிட தகுதியற்றவர்களாயிருந்தோம், ஆனால் இருந்தபோதிலும் அவர் நம்மிடம் அன்பு கூர்ந்தார். அவருடைய குடும்பமாகிய திருச்சபையில் அங்கத்தினர்களாய் உள்ளதால், இழந்துபோன பாவிகளான நாம் நமது சத்துருக்களின்மீது அவ்விதமாக தெய்வீக அன்பினை அளித்திடல் வேண்டும்.

நமக்கும் பிறருக்கும் துன்பமளிக்கும் துன்மார்க்கர்களின் நிலைமை என்ன? துன்மார்க்கர் தண்டனையின்றி இருக்க முடியுமா? தடுக்கப்பெற்ற குற்றவாளிகள் பழிக்குப்பழி வாங்கிட முயற்சிப்பது நியாயமாகுமா? நாம் கிறிஸ்தவர்களாய் இருப்பதால், சட்டத்தை நம்கைகளில் எடுத்துக் கொண்டு துன்மார்க்கரை தண்டிக்கக் கூடாதே. குற்றஞ்செய்பவர்களுக்கு நன்மையைக்கூறி கற்பித்து அவர்களை மாற்றுவதே நமது கடமையாகும்.

ஆனால் தேவன் தவறு செய்தவருக்கு தண்டனைக்கான கருவியை வைத்திருக்கிறார். மனித சமுதாயமான அந்த நாட்டின் அரசாங்கம் தீமை பயக்கிறவர்களை இவ்வுலக சட்டத்தின்படி நியாயந்தீர்த்திட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கடைசி நாளில் தேவன் தாமே மனந்திரும்பாதவர்களை நியாயந்தீர்த்து தண்டிப்பார்.

தனிப்பட்டவகையில் தங்களின் ஆவிக்குரியவர்களை இழந்தவர் அல்லது அநியாயமாக மாபெரும் வேதனைக்குள்ளானவர், தீவிரவாதிகள் மற்றும் தீமை செய்வோர் தண்டனை பெறுவர் ஆனால் அது தனிப்பட்டவர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் பணி அல்ல. "கண்ணுக்கு கண்" என்ற சட்டம் கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கப்பட்டவை அல்ல. ஆனால், நீங்கள் அதுவேதாகமத்தில் உள்ளது எனலாம்! மாறாக தேவன் அதனை மாற்றியிருக்கிறாரா? இல்லை, இல்லவே இல்லை. பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் நாட்டு மக்களுக்கு சமுதாய மற்றும் ஆவிக்குரிய சட்டங்கள் அளிக்கப்பட்டது, ஏனெனில் அது அவர்களின் சமுதாய, ஆவிக்குரிய தேசமாகும். சமுதாய தலைவைர்கள் துன்மார்க்கனை தண்டித்திட போதிக்கப்பட்டனர், அவ்வாறே ஆவிக்குரியவர்களுக்கு, ஆவிக்குரிய முன்னோடிகள் இருந்தனர். ஆனால் புதிய ஏற்பாட்டின் சட்டம் இன்று நடைமுறையில் நம்மை கட்டுப்படுத்திவருகிறது - ஒரு கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய சரீரமாக ஆவிக்குரிய கூட்டத்தின்படி வாழக்கூடியது. சமுதாய சட்டமானது அவர்களின்

சமூகத்தின் அடிப்படையில் நடைமுறையில் உள்ளது.

தனிப்பட்ட கிறிஸ்வர்களுக்கு பவுல் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதியதாவது, "ஒருவனும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். கூடுமானால் உங்களானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது. நானே பதிற்செய்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்கு போஜனங்கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினிதழலை அவன் தலையின் மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு" ரோம.12:17-21.


மாறாக சமூக அரசுக்கு தேவன் கூறுவதாவது "கோபாக்கினைக்குரிய தீங்கிழைப்பவர்களுக்கு நீங்கள் என் பட்டயமாய் இருக்கிறீர்கள்" ஆகையால் உலகோரின் அரசாட்சியில் யாரெல்லாம் சட்டத்தை மீறுகிறார்களோ அவர்கள் தண்டிக்கப்படவும், உதவியற்றவர்களுக்கு உதவக்கூடியவர்களாகவும் இருந்திடல்வேண்டும்.

புதிய ஏற்பாட்டிலே நமக்கு கட்டளையிடப்பட்டதாவது "எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக் கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள். மேலும் அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துற்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள்; ஆகையால் நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்க வேண்டுமானால், நன்மை செய், அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும். உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் தேவ ஊழியக்காரனாயிருக்கிறான். நீ தீமைசெய்தால் பயந்திரு; பட்டயத்தை அவன் விருதாவாய் பிடித்திருக்கவில்லை; தீமை செய்கிறவன் மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயிருக்கிறானே" ரோம.13:1-4.

மாபெரும் நியாயத்தீர்ப்பின் நாளிலே, தேவன்தாமே தமது கடைசி வார்த்தையால் தமது தீர்ப்பை, தீமை செய்கிற மற்றும் கீழ்ப்படியாதவர்களின் கிரியைகளுக்குத் தக்க தண்டனையை அடைவர். "மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்க நியாயத்தீர்ப்படைந்தார்கள்.... ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்" (வெளி.20:12-15).

எனதன்பு சகோதர, சகோதரிகளே இம்மாபெரும் தண்டனையிலிருந்து தப்பி ஜீவனுக்குள் சென்றிட இப்பொழுதே, இன்றே முயன்றிட வேண்டுகிறேன்.

மேலும் விபரமறிய தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
Church of Christ
P.O.Box 5, Batlagundu -624 202
SOUTH INDIA
Phone:04543 263 278
Cell:94435 58041
Tamil Tract No.45




# நான் என் சத்துருக்களை எவ்வாறு நடத்துகிறேன்?

ஜே.சி.சோட்

*Published by*
**World Evangelism Tracts**
**P.O.Box 5, Batlagundu -624 202, South India**
Request a Free Bible Correspondence Course
**Presented by the Church of Christ**